# சங்க இலக்கியத்தில் அறம்

19

ம.பாரதிகண்ணன், இளங்கலைத்தமிழ்

காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.

ஆய்வுச்சுருக்கம்:

தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர்: இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர் உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்கனைச் செய்ய மறுத்தனர்: சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். வீரத்தைப் போல் கொடையும் தமிழ்ர்களால் விரும்பப்பட்டது. சங்க இலக்கியத்தில் அறம் பற்றிய தெளிவே இந்த ஆய்வாகும்.

முன்னுரை:

சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம் சங்காலம்.. இந்த சங்காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிகால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்க கால அறங்கள் இயல்பானவை. அவ்வாறான அறங்களைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்

அற இலக்கிய தோற்றம்:

மனித சமூகத்தில் நாகரிகம் என்று முகிழ்த்ததோ அன்றே அறம் குறித்த சிந்தனையும் தோற்றம் பெற்றுவிட்டது. அதுமுதற்கொண்டு சமூகத்தில் எண்ணற்ற அறங்கள் சான்றோர்களால் உரைக்கப்பெற்று நடைமுறை வாழ்க்கையில் மக்களால் பின்பற்றப்பட்டு வரலாயின. இத்தகைய அறக்கருத்துக்கள் புலவர்களாலும் அறவாணர்களாலும் தாங்கள் இயற்றிய இலக்கியங்களிலும் அறநூல்களிலும் காலந்தோறும் எடுத்துரைக்கப்பெற்று வந்துள்ளன. அந்தவகையில் தமிழ் இலக்கியத்தின் மிகத்தொன்மையான இலக்கியமான பாட்டும் தொகையும் எனக் குறிப்பிடப்படும் சங்க இலக்கியத் தொகை நூல்களிலேயே ஏராளமான அறக்கருத்துகள் புலவர்களால் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. எனினும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6- ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் அறம் வலியுறுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட நீதி நூல்கள் பல்கிப் பெருகின. இத்தகைய காலத்தையே நீதிநூற்காலம் எனக் குறிப்பிடுகின்றனர். இக்கால கட்டத்தில் தோற்றம் பெற்;ற 18 நூல்களை பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் என்னும் சங்க மருவியகால நூல்கள் என்றும் குறிப்பிடுவர்.

தமிழில் அற நூல்கள்:

சங்க இலக்கியங்களிலேயே ஆங்காங்கு உரிய அறக் கருத்துகளைக் கூறுவதற்குப் புலவர்கள் தவறவில்லை. சமூகப் போக்கில் மாறுதல்கள் விளைய வேண்டும் என விரும்பிய சான்றோர்கள் அவ்வப்போது அறநூல்கள் வரைந்தனர். பதினெண் கீழ்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள். இவை அக்காலப் பண்பாட்டை உருவாக்கப் பெரிதும் காரணமாயிருந்தன. அவையாவன.

- திருக்குறள்

□நான்மணிக்கடிகை

□இனிவை நாற்பது

□ஆசாரக்கோவை

□சிறுபஞ்சமூலம்

□நாலடியார்

□இன்னா நாற்பது

□திரிகடுகம்

□பழமொழி

□முதுமொழிக்காஞ்சி

□ஏலாதி

மேற்கூறிய பதினொரு நூல்கள் தமிழரின் அறவாழ்வைக் காட்டுவன. இவை தவிர பிற்காலத்தில் ஔவையார், குமரகுருபரர், அதிவீரராம பாண்டியர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற புலவர் பெருமக்கள் நீதிநூல்களை இயற்றியுள்ளனர். சிறுவர்க்கெனவே ஆத்திசூடி, மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன்
(இயற்றியவர்: ஔவையார்) வெற்றிவேற்கை
(இயற்றியவர்: அதிவீரராம பாண்டியன்) நன்னெறி
(இயற்றியவர்;: சிவபிரகாசர்) போன்ற நீதி நூல்கள் எழுதப்பட்டன. சதகம் எனப்படும் நூறு பாடல்கள் கொண்ட நீதி நெறித் தொகுப்புகளும் தோன்றின.

“அறத்தான் வருவதே இன்பம்

(திருக்குறள் பாயிரம் 39)

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்”

(திருக்குறள் பாயிரம் 35)

என்று “பொய்யாமொழிப்புலவர்” உரைக்கிறார். இன்றைய “புதுமைக்கவிஞர் பாரதியோ” அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் எனத் தொடங்கி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதே தலையாய அறமென்கிறார்.

“செல்லுயிர் கொடுத்தேனும் செங்கோலை
வளையாது
நிமிர்த்துவது அரசியல் அறமாகும்”

(சிலம்பு 25 98-99 )

என வலியுறுத்துகிறது “மணிமேகலை” கருணை கூர்ந்து யாவர்க்கும் வேண்டுவன ஈதலே இன்பம் என்று இளையான்குடி மாறநாயனார் வாழ்ந்து காட்டினார்.

அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை:

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுப்பிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது. இந்த வணிக நோக்கத்தின் செய்திகள் பல நூல்களில் கூறப்படுகிறது.

“இன்மைச் செய்தது மறுமைக்கு
ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆஅய்
அல்லன்” ( புறம் -134)

னச் சங்ககால மன்னர்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிர்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார். நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் போர் அறம்:

தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர் புறமுதுகிட்டோ சிறார் முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு பார்ப்பளர் பெண்கள் நோயாளர் புதல்வரைப் பெறாதவர் ஆகியோர்க்குத் தீங்கு வரமால் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

“எறியார் எறிதல் யாவணது
எறிந்தோர்
எதிர்சென்று எறிதலும் செல்லான்”
(புறம்;:301)

கொடை புரிந்ததில் அறம்:

ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.

“செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே”
(-புறம்:189)

என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

கோடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது இபழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்தரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்களஇ; கொடை இலக்கியங்களாவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப்

பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

ஆரியன என்று கருதாது தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமையாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள்

“இல்லோர் ஒக்கல் தலைவன்
பசிப்பிணி மருத்துவன்”

(புறம் - 95)

என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன். என்கிறார் ஔவையார்

எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்

புற இலக்கியங்கள் மட்டுமின்றி அக இலக்கியங்களிலும் ஈதல்; பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஈயாமை இழிவு இரப்போக்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது. வாழும் உயிர்க்க அறமே இன்பம் என்பதை திருக்குறள் வலியுறுத்துகிறது.

“சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு”

(திருக்குறள் - பாயிரம் - 31)

ஆதனால்தான் இல்லறம் துறவறம் என இருவேறு வாழ்க்கைமுறையிலும் அறம் விடாது பற்றிக்கிடக்கிறது. ஆதலால்

“அறம் செய விரும்பு.”

(ஆத்திச்சூடி-1)

வள்ளல்கள் மட்டுமின்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

முடிவுரை:

மனம் புத்தி சித்தம் ஆகிய அகநிலை உறுப்புகளை அன்பில் தோயச் செய்து யார்மட்டும் அன்புடையராய் வாழ்வதே அறம் ஆகும் வாழும் உயிர்க்கு அறத்தை விட நன்மையாவது ஏதுமில்லை என்கிறது

துணைநூற்பட்டியல்

1.புறநானூறு மூலமும் உரையும்
புலியூர் கேசிகன்
சரண் பதிப்பகம் சென்னை
2.திருக்குறள் மூலமும் உரையும்
பரிமேலழகர்,அருணாபதிப்பகம்,சென்னை.